# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP.No.249/2020

Deposition of witness for the Petitioner/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 19-07-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : S.Jayalakshmi | Village | : |
| Husband Name | : Vivek Anbarasu | Taluk | : |
| Age | : | Calling | : |

<u>பிரமாண பத்திரத்தின் தொடர்ச்சியாக முதல் விசாரணை</u>

நான் மனுவின் முதலாவது மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 26 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, ம.த.சா.1 முதல் 26 வரை ஆகும். நான் இந்த வழக்கில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் வழக்கு விபத்தில் இறந்தவரின் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். அவரின் முதல் மனைவி சென்னை விருகம்பாக்கத்தில் வசித்து வருகிறார். மூன்றாவது எதிர்மனுதாரர் எனது மாமியார். விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. விபத்தின் போது எனது கணவர் மீனாட்சி பல் மருத்துவ கல்லூரியில் டெக்னீசியனாக வேலை செய்து வந்தார். எனது திருமணத்திற்கு 4 வருடத்திற்கு முன்னர் இருந்து அவர் அந்த பணியில் இருந்து வந்தார். அவருக்கு நிரந்தர வேலை. அவரின் மாத வருமானம் ரூ.25,000/-. நான் தாக்கல் செய்துள்ள எனது கணவரின் வங்கிக் கணக்கு பட்டியலில் அவரின் மாத வருமானம் ரூ.14,000/- பற்று செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் நிரந்தர வேலையில் இல்லை என்றும் அவரின் வேலை தற்காலிகமானது என்றால் சரியல். அவர் வேலை பார்த்து வந்த கல்லூரியில் இருந்து சாட்சியை நான் விசாரிக்க உள்ளேனா என்றால் ஆம். நான் கேட்டிருக்கும் இழப்பீடு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல.

(3 வது எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).